S.T.C.No.1203/2019 Date:10.09.2022

**அ.சா.1** ஆனந்தகுமார்

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

1) எதிரி எந்த பெயரில் கேஸ் கம்பெனி வைத்துள்ளார் என்றால் Bharath Home Applliance என்ற பெயரில் கம்பெனி வைத்துள்ளார். இதற்கு முன்பு எதிரியிடம் எனக்கு வரவு செலவு இருந்ததா என்றால் 2, 3 முறை எதிரி என்னிடம் பணம் பெற்று திருப்பி தந்துள்ளார். அவ்வாறு எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் 50 ஆயிரம் மற்றும் 1 லட்சம் வாங்கினார். அவ்வாறு பணம் பெறும்போது காசோலைகளை செக்யூரிட்டிக்காக கொடுப்பாரா என்றால் இல்லை பணம் பெற்று இரண்டொரு நாளில் கொடுத்துவிடுவார். காசோலையில் கையெழுத்து எங்கு வைத்து போட்டு கொடுத்தார் என்றால் என் வீட்டிற்கு வந்து பணம் வாங்கும்போது என் முன்னால் தான் காசோலையில் கையொப்பம் செய்தார்.

2) எந்த தேதியில் பணம் வாங்கினார் எப்போது திருப்பி கொடுப்பேன் என சொன்னார் என்றால் 25.06.2019-ல் பணம் வாங்கினார் ஒரு மாதத்திற்குள் திருப்பி கொடுப்பதாக சொன்னார். எந்த வங்கியின் காசோலையை கொடுத்தார் என்றால் HDFC வங்கி. நான் பணத்தை எப்போது கேட்டேன் அதற்கு அவர் என்ன சொன்னார் என்றால் நான் பணம் கொடுத்து 25 நாட்கள் கழித்து கேட்டேன் அதற்கு அவர் பணம் எதுவும் என்னிடம் வாங்கவில்லை என்று சொன்னார். காசோலையில் எனது Initial திருத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை.

3) எதிரி என்னிடம் பணம் பெறும்போது எனது வீட்டில் வேறு யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் காலை சுமார் 06.00 மணிக்கு. எதிரியுடன் வேறு யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை எதிரி மட்டும் தான் வந்தார். எதிரி சங்ககிரியில் வசித்து வருபவரா என்றால் தற்போது சங்ககிரியில் வசித்து வருகிறார். இதற்கு முன்பு எங்கு வசித்து வந்தார் என்றால் காரவள்ளியில் வசித்து வந்தார். பணம்

எந்த மாதிரி கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டு 1000 நோட்டுகள் கொடுத்தேன். எதிரி தான் பணம் வாங்கவில்லை என்று தெரிவித்த பிறகு அவர் மீது ஏன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் அவர் காசோலை கொடுத்திருந்ததால் புகார் கொடுக்கவில்லை.

4) எதிரியின் தாத்தா எப்போதிலிருந்து எனக்கு பழக்கம் என்றால் சுமார் 15 வருடங்களாக பழக்கம். மேற்படி கேஸ் கம்பெனி மூலம் அவர்களுக்கு போதுமான வருமானம் வந்து கொண்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புஷ்பா என்பவர் மூலம் தான் எதிரி எனக்கு பழக்கம் என்று சொன்னால் சரியல்ல புஷ்பா என்வரை எனக்கு தெரியாது. நான் புஷ்பா என்பவருடன் சேர்ந்து கொண்டு எதிரி மீதும் ரமேஷ் என்பவர் மீதும் இந்நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

( எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- Ananthakumar

Sd/- S.R.Babu 10.09.2022,
Judicial Magistrate No.1, Sankari.